### விமானிகளின் பணிநேர வரம்பு விதிகளை

# மத்திய அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும்

## பிரதமருக்கு மாணிக்கம் தாகூர் எம்.பி. கடிதம்

**சென்னை**

இந்திய விமான நிறுவனங்களில் பணிநேர வரம்பு விதிகளை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு விருதுநகர் எம்பி மாணிக்கம் தாகூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகத்துக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம்: கடந்த ஏப்.29-ம் தேதி பணியில் இருந்தபோது கேப்டன் தருண் தீப்சிங் என்ற விமானி உயிரிழந்தார். அதற்கு அடுத்த நாளே (ஏப்.30) பெங்களூருவில் கேப்டன் அர்ஜுன் நாயுடு என்ற விமானி, பணியின்போது காலமானார். மிகக் குறுகிய கால இடைவெளியில் நிகழ்ந்த இந்த மரணங்கள் தற்செயலானது அல்ல. விமானப் போக்குவரத்து துறையில் நிலவும் முறையற்ற பணி மேலாண்மையையே இது காட்டுகிறது.

விமானிகளின் உடல் சோர்வைக் குறைப்பதற்காக கொண்டு வரப்பட்ட பணிநேர வரம்பு விதிகள், விமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகளால் நீர்த்துப் போயுள்ளன. இடைக்கால நடவடிக்கைகளாக கருதப்பட்ட இந்த சலுகைகள், தற்போது நிரந்தர நடைமுறையாக மாற்றப்பட்டு, விமானிகள் ஓய்வின்றி பணிபுரியும் சூழல் உருவாகியுள்ளது. விமானிகள் தங்களுக்கு ஏற்படும் சோர்வு குறித்து அளிக்கும் புகார்கள் பெரும்பாலான நிறுவனங்களால் நிராகரிக்கப்படுகின்றன. இது பாதுகாப்பற்ற சூழலை உருவாக்குகிறது.

எனவே, இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி நேரடியாக தலையிட்டு, விமானப் பணிநேர வரம்பு விதிகளை காலதாமதம் இன்றி அனைத்து நிறுவனங்களிலும் உடனடியாக அமல்படுத்த வேண்டும். விமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக பணிநேரச் சலுகைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். விமானிகளின் கட்டாய வாராந்திர ஓய்வு முறையை உறுதி செய்ய வேண்டும். 2 விமானிகளின் மரணம் குறித்து சுதந்திரமான, வெளிப்படையான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ‘உணவுப் பொருள்களுக்கான ஜிஎஸ்டி வரியை ரத்து செய்ய வேண்டும்’

வணிக பயன்பாட்டு எரிவாயு உருளை விலை உயர்வால் உணவகங்கள் கடும் பாதிப்பை சந்தித்து வரும் நிலையில், உணவுப் பொருள்கள் மீது விதிக்கப்படும் ஜிஎஸ்டி வரியை ரத்து செய்ய வேண்டும் என அரசுக்கு சென்னை ஹோட்டல்கள் சங்கத் தலைவர் எம்.ரவி. கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறியதாவது: சென்னையில் உணவகங்களை நடத்துவதே மிகவும் சவாலாக மாறிவிட்டது. இடத்தின் உரிமையாளர்கள் ஒரு சதுர அடிக்கான வாடகையை ரூ.80–ல் இருந்து ரூ.200 ஆக உயர்த்திவிட்டனர். அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற மளிகை விலையும் உயர்ந்து விட்டது.

இந்தச் சூழலில் வணிக பயன்பாட்டு எரிவாயு உருளை விலையை எண்ணெய் நிறுவனங்கள் கடுமையாக உயர்த்தியதால் உணவு வகைகளின் விலையையும் உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே, உணவகங்களை பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு, மின்சார அடுப்பு வாங்கும்போது விதிக்கப்படும் 18 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும். மின்சார அடுப்பு பயன்படுத்தும் உணவகங்களுக்கு யூனிட்டுக்கு ரூ.2 குறைக்கப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும்.


காலை 6 முதல் 10 வரையும், மாலை 6 முதல் இரவு 10 வரையும் ‘பீக் ஹவர் சார்ஜ்’ என்று மின் சார வாரியம் கூடுதல் கட்டணம் வசூலிக்கிறது. இதனால், இது வரை ரூ.1 லட்சம் மின் கட்டணம் செலுத்திவந்த உணவக உரிமையாளர்கள் தற்போது ரூ.30 ஆயிரம் சேர்த்து ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த கட்டண உயர்வை மின்வாரியம் திரும்பப் பெற வேண்டும்.

உணவகங்களில் சோலார் மின் உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கான அனுமதியை தமிழக அரசு உடனே வழங்க வேண்டும். உணவகங்களில் இதுவரை ‘கமர்ஷியல்’ (வணிக பயன்பாடு) மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதைத் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணம் என்ற அடிப்படையில் மாற்றம் செய்து வசூலிக்க வேண்டும். உணவுப் பொருள்களுக்கான ஜிஎஸ்டியை ரத்து செய்ய வேண்டும் என்றார்.

# ஸ்மார்ட்போன் ஏற்றுமதியில் இந்தியாவுக்கு 2-ம் இடம்

ஸ்மார்ட்போன்கள் ஏற்றுமதியில் சீனா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. கடந்த 2024-25 நிதியாண்டில் வியட்நாம் 2-ம் இடத்திலும் இந்தியா 3-ம் இடத்திலும் இருந்தன. கடந்த நிதியாண்டில் இந்தியா ரூ.1.48 லட்சம் கோடி மதிப்பிலான ஸ்மார்ட்போன்களை ஏற்றுமதி செய்தது. இது முந்தைய ஆண்டைவிட 42% அதிகம்.

கடந்த 2025-26 நிதியாண்டில் இந்தியாவின் ஸ்மார்ட்போன் ஏற்றுமதி ரூ.2.85 லட்சம் கோடியை எட்டி 2-ம் இடம் பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2025 ஏப்ரல் முதல் 2026 பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் இந்தியாவின் ஸ்மார்ட்போன் ஏற்றுமதி ரூ.2.52 லட்சம் கோடியாக அதிகரித்தது. இது முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 27% அதிகம். இதில் அமெரிக்கா 66 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. மற்ற நாடுகளுக்கான ஏற்றுமதி விவரம்:




ஆதாரம்: மத்திய வர்த்தக அமைச்சகம்

**தேசிய மருத்துவ ஆணையம் தடையை நீக்கியுள்ளதால்**

# 6 புதிய மருத்துவ கல்லூரிகளை தொடங்க வேண்டும்

**பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தல்**

■ சென்னை

தேசிய மருத்துவ ஆணையம் தடையை நீக்கியுள்ளதால், 6 புதிய மருத்துவ கல்லூரிகளை தொடங்க வேண்டும் என்று, பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை:

இந்தியாவில் எந்த மாநிலமாக இருந்தாலும் 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகபட்சமாக 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும், அதற்கும் கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ள மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளோ, மருத்துவ மாணவர்சேர்க்கைஇடங்களோ அனுமதிக்கப்படாது என்றும் தேசிய மருத்துவ ஆணையம் கடந்த 2023-ம் ஆண்டு ஆக.6-ம் தேதி அரசிதழ் அறிவிக்கை வெளியிட்டது.

அதன்படி, தமிழகத்தின் மக்கள்தொகை அடிப்படையில், இன்றைய நிலையில், 7,731 எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே இருக்க முடியும். ஆனால், ஏற்கெனவே தமிழகத்தில் அரசு - தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 12,650 எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை இடங்கள் இருப்பதால் புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கவும் முடியாது. ஏற்கெனவே தொடங்கப்பட்ட மருத்துவ கல்லூரிகளில் உள்ள மாணவர் சேர்க்கை இடங்களை அதிகரிக்கவும் முடியாத நிலை உருவானது.

இந்நிலையில், புதிய விதிமுறைகளை கைவிடுவதாக கடந்த கடந்த மாதம் 27-ம் தேதி வெளியிட்ட அறிவிக்கையில் தேசிய மருத்துவ ஆணையம் தெரிவித்திருக்கிறது. இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள புதிய அறிவிக்கையின்படி, தமிழகத்தில் இதுவரை அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படாத காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், தென்காசி ஆகிய 6 மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்குவதற்கு எந்த தடையும் இல்லை.

புதிய மருத்துவ கல்லூரிகளை தொடங்குவதற்கான தடை நீக்கப்பட்டு விட்ட நிலையில், 6 மாவட்டங்களிலும் அரசு மருத்துவ கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும். அடுத்த சில நாள்களில் தமிழகத்தில் புதிய அரசு அமைக்கப்பட்டவுடன் இதற்கான நடவடிக்கையை பாமக மேற்கொள்ளும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார சமநிலை இல்லாத வளர்ச்சி

**முனைவர் ஹாஜா முகைதீன்**

புவிசார் அரசியல் பொருளாதார நிச்சயமற்ற சூழ்நிலை, சுற்றுச்சூழல் பாதிப்புகள், கட்டாய இடம் பெயர்தல் ஆகியவற்றால் பட்டினி பேரழிவை நோக்கி ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் சென்று கொண்டிருக்கின்றன என்று உலக பட்டினி குறியீடு - 2025 அச்சமூட்டிய நிலையில், தற்போதைய உலக சமத்துவமின்மை அறிக்கை-2026 ஏற்றத்தாழ்வுகளை அம்பலப்படுத்துகிறது.

பாரிஸில் செயல்படும் உலக சமத்துவமின்மை ஆய்வகம், பொருளாதார அறிஞர்களான லூகாஸ் சான்செல் ரெக்கார்டு, ரிக்கார்டோ கோமஸ்-கரெரா, ரோவைடா மோஷரிஃப், தாமஸ் பிக்கெட்டி உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட அறிஞர்களின் உதவியோடு தயாரித்த உலக சமத்துவமின்மை அறிக்கை-2026 வருமானம், சொத்து, பாலினம், வாங்கும் திறன் உள்ளிட்டவற்றில் உலக அளவிலும் இந்தியாவிலும் அதிக அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை வெளிக்கொணர்ந்துள்ளது.

2018,2022-ஆம் ஆண்டுகளுக்குப்பிறகு, மூன்றாவது முறையாக இந்த அறிக்கை தற்போது வெளியாகி உள்ளது. உலக மக்கள்தொகையில் 10% நபர்களின் வருமானம் மீதமுள்ள 90% மக்களின் வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. உலகின் 53% வருமானத்தை முதல் 10% மக்கள் கொண்டுள்ளனர்.

முதல் 10% செல்வந்தர்களிடம் உலகின் சொத்துகளில் 75% உள்ளன. அவர்களில் முதல் 1% செல்வந்தர்கள் 37% சொத்துகளை வைத்துள்ளனர். உலக மக்களில் பாதி பேர் வைத்துள்ள சொத்துகளைவிட இது 18 மடங்கு அதிகமாகும். அடித்தட்டில் வாழும் 50% மக்களின் சொத்துகள் வெறும் 2% மட்டுமே 60,000 நபர்களின் கையில் உலகின் பாதி பேரின் சொத்துகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமான சொத்துகள் உள்ளன. உலகின் சொத்துகளில் இவர்களின் பங்கு 4%-லிருந்து 6%-ஆக உயர்ந்துள்ளது.

கீழ்த்தட்டில் உள்ளவர்களின் சொத்துகளைவிட இரண்டு மடங்கு அதிகமாக செல்வந்தர்களின் சொத்துகள் வளர்ந்துள்ளது. காலநிலை மாற்றத்துக்குக் காரணமான கார்பன் வெளியேற்றத்தில் உலகின் ஏழ்மையான 50% மக்களின் பங்கு வெறும் 3% மட்டுமே. அதேசமயம் முதல் 10% செல்வந்தர்கள் தங்களின் முதலீட்டுத் தொழில்கள், ரியல் எஸ்டேட், உள்கட்டமைப்புகள் மூலம் வெளியேற்றுகிற கார்பனின் அளவு 77% ஆகும். மேலும், முதல் 1% செல்வந்தர்களின் பங்கு கார்பன் வெளியேற்றத்தில் 41% ஆகும். குறைந்த வருமான நாடுகளின் ஏழ்மையான மக்கள் இதன் அபாயங்களை முழுமையாக எதிர்கொள்கின்றனர்.

ஊதியம் வழங்கப்படுவதிலும் பாலின ரீதியான ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. குறிப்பாக, அமைப்புசாரா துறையில் அதிகமாக உள்ளன என அறிக்கை கூறுகிறது. ஊதியம் இல்லாத வீட்டு வேலை செய்யும் நேரத்தையும் சேர்த்தால் பெண்கள் வாரத்துக்கு சராசரியாக 53 மணி நேரம் உழைக்கிறார்கள். ஆண்கள் 43 மணி நேரமே உழைக்கிறார்கள். ஊதியம் இல்லாத வீட்டு வேலையை நீக்கினால்கூட ஆண்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு வழங்கப்படும் ஊதியத்தில் 61% மட்டுமே பெண்கள் பெறுகிறார்கள் என்றும், ஊதியம் இல்லாத வீட்டு வேலையையும் சேர்த்தால் இந்த விகிதம் 32% மட்டுமே என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

பெண் தொழிலாளர்களின் வருமானம் 1990-களுக்கு பிறகு உயரவே இல்லை என்பதுடன், அவர்களின் சேமிப்புத் திறனும் அரசியல் பங்கேற்பும் தொழில் வாய்ப்புகளும் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதையும் இந்த அறிக்கை தெளிவாக்கியுள்ளது.

இந்தியாவின் முதல் 10% பணக்காரர்கள் நாட்டின் மொத்த வருமானத்தில் 58% ஈட்டுகின்றனர். கீழ்மட்டத்தில் இருக்கும் 50% மக்கள் 15% வருமானத்தை மட்டுமே ஈட்டுகின்றனர். நாட்டின் மொத்த சொத்துகளில் 65% சொத்துகளை மேல் தட்டில் உள்ள முதல் 10% பணக்காரர்கள் வைத்துள்ளனர். அவர்களில் 1% பணக்காரர்கள் 40% சொத்துகளை வைத்துள்ளனர்.

கீழ்த்தட்டில் வாழும் 50 % சதவீதத்தினரின் சொத்துகள் 6% விட குறைவானதாகும். இந்தியாவில் வருமானம் மற்றும் சொத்துகள் பகிர்வில் மிகப் பெரும் அளவில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாகவும் கடந்த பத்தாண்டுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் வரும் காலங்களில் இந்த நிலை மாறுவதற்கான வாய்ப்புகளும் தெரியவில்லை என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

உலக சராசரியான 34 சதவீதத்தைவிட மொத்த உழைப்பாளர் வருமானத்தில் 18 சதவீதத்தை மட்டுமே பெண் தொழிலாளர்கள் இந்தியாவில் சம்பாதிக்கின்றனர். மேலும், தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்கேற்பு 15.7 % மட்டுமே. கடந்த 10 ஆண்டுகளில் அதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நவீன தாராளமய வரிவிதிப்பு கொள்கைகள் பணக்காரர்களின் மீதான வரிக் குறைப்பைத் தொடர்ந்து ஆதரிப்பதே ஏற்றத்தாழ்வு நீடிக்கவும், அதிகரிக்கவும் காரணம் என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. கல்வி, சுகாதாரம், காலநிலை சவால்கள் மீதான அரசின் செலவினங்கள் குறைவதற்கும் இத்தகைய வரிமுறையே காரணம் என்றும் கூறுகிறது.

மக்கள் நலன் நாடும் அரசாகச் செயல்படுவதற்கு தேவையான வருமானத்தை திரட்டவும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் வழிவகை செய்கிற முற்போக்கான வரி விதிப்பு அவசியம்.


ஏற்றத்தாழ்வுகளை சமாளிக்க வழி கண்டுபிடிக்காமலும் சமத்துவத்தை நோக்கி ஓர் அடி எடுத்து வைக்காமலும் பூமி வெப்பமயமாதலைத் தடுப்பது குறித்துக் கற்பனை செய்யவே முடியாது. சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் பொருளாதார அறிஞர்கள் மட்டுமல்லாது, அரசியல், மானுடவியல், சமூகவியல் மற்றும் வரலாற்று அறிஞர்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என தாமஸ் பிக்கெட்டி குறிப்பிடுவதாக புதுவை பல்கலைக்கழக பிரெஞ்சு துறை முன்னாள் தலைவர்.எஸ்.ஆர் கிருஷ்ணமூர்த்தி பதிவிட்டுள்ளார்.

உலகின் வளர்ச்சியானது சமூகத்தில் பொருளாதார சமநிலையை ஏற்படுத்தவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001


# சுகாதாரக் கட்டமைப்புகளைச் சீர்குலைக்கும் காலநிலை மாற்றம்

## பொதுச் சுகாதாரத் திட்டமிடலில் காலநிலைத் தரவுகளின் ஒருங்கிணைப்பு குறைவு




கு.கணேசன்
பொதுநல மருத்துவர்,
தொடர்புக்கு: gganesan95@gmail.com


அண்மையில் காலநிலை மாற்றம் தொடர்பாக ClimateRISE alliance என்னும் ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை தேசியப் பொதுச் சுகாதாரத் துறையின் கவனத்தை ஈர்த்துள்ளது. 'இந்தியாவின் காலநிலை - சுகாதாரச் சந்திப்புகள் - மீள்திறனுக்கான பாதைகள்' என்கிற தலைப்பில் வெளிவந்துள்ள அந்த அறிக்கை, காலநிலை மாற்றங்கள் இனிமேல் இந்தியாவில் சுற்றுச்சூழல் சார்ந்த கவலைகளை மட்டும் கொண்டுவரப்போவதில்லை; பொதுச் சுகாதாரக் கட்டமைப்புகளுக்கும் சவால்விடும் அளவுக்கு அவை வளர்ந்துவருகின்றன என்று எச்சரித்துள்ளது.

"கடந்த 30 ஆண்டுகளில், காலநிலை மாற்றத்தால் உலக அளவில் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 40 சதவீத மாவட்டங்கள் காலநிலை மாற்றம் தொடர்பான விளைவுகளால் அதிக அபாயத்தை எதிர்கொள்கின்றன. எப்போதும் இல்லாத அளவுக்கு இந்தியா இப்போது குளிர் அலைகளிலிருந்து வெப்ப அலைகளுக்கும் வெப்ப அலைகளிலிருந்து குளிர் அலைகளுக்கும் அடுத்தடுத்து விரைவாக மாறுவதால், இந்தக் காலநிலை மாற்ற விளைவுகள் புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களோடு முடிந்துவிடாமல் தொற்றுநோய்ப் பரவல், சுகாதாரச் சேவை வழங்குதல் போன்றவற்றிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

### அதிகரிக்கும் தொற்றுநோய்கள்

மிகவும் வெளிப்படையாகத் தெரிகிற தாக்கங்களில் முக்கியமானது, டெங்கு பாதிப்பு. உலகளாவிய டெங்கு பாதிப்பில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில்தான் இருக்கிறது. அதிகரித்துவரும் வெப்ப அலைகளும் மாறிவரும் மழைப்பொழிவுகளும் மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்களை இந்தியாவில் இதுவரை தாக்கம் செலுத்தாத இடங்களுக்கும் பரப்புகின்றன. முன்னர் குறைந்த அளவிலான பாதிப்புகளைப் பதிவுசெய்த இமாச்சலப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர் உள்படப் பல குளிர்ப் பகுதிகளில் டெங்கு பாதிப்பு அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மேலும், திடீர் வெள்ளப்பெருக்கு பொதுச் சுகாதார அபாயங்களை இன்னும் தீவிரப்படுத்துகிறது.

எடுத்துக்காட்டாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதும் குடிநீருடன் அசுத்த நீரும் கலந்துவிடுவதால் கல்லீரல் அழற்சிக் காமாலை ஏ, காலரா, ஈ. கோலை என்னும் பாக்டீரியா தொடர்பான குடல் நோய்கள் அதிகமாகப் பரவுகின்றன. வெள்ளம் வடியும்போது, லெப்டோஸ்பைரோசிஸ் என்னும் எலிக் காய்ச்சலும் பரவுகிறது. ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கினால் மட்டும் 5,000க்கும் அதிகமானோர் உயிரிழக்கிறார்கள். இந்த எண்ணிக்கை இனி வரும் காலத்தில் அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

### பாதிக்கும் தொற்றாநோய்கள்

காலநிலை மாற்றத்தால் தொற்றுநோய்கள் தான் பரவும் என்று இதுவரை கூறப்பட்டது. இப்போது வெளிவந்துள்ள அறிக்கையில் தொற்றா நோய்களும் பாதிக்கும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. வெப்ப அலைகளின்போது இந்தியாவில் மனித உயிரிழப்புகள் அதிகரிப்பதைச் சுட்டிக்காட்டும் பல அறிக்கைகளில், அதிகரித்துவரும் வெப்ப அலைகளுக்கும் இதயநோய்க்கும் தொடர்பு இருப்பதைக் காண முடிகிறது. இந்தியாவில் நிகழும் உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இறப்புகள் இதய நோய்களால்தான் ஏற்படுகின்றன என்பதால், இந்த எச்சரிக்கையை எளிதில் கடந்துபோக முடியவில்லை.

அதிகரிக்கும் காற்று மாசுபாடு இந்தத் தொற்றாநோய்களின் சுமையைக் கூட்டுகிறது. காற்று நுண்மாசுகள் (PM2.5) மிகுந்த இடங்களில் பணிபுரிவோருக்குச் சிறுநீரக நோய்கள் ஏற்படும் சாத்தியம் அதிகரிக்கிறது. உலகின் மிகவும் மாசுபட்ட 30 நகரங்களில் இந்தியாவில் மட்டும் 17 நகரங்கள் இருக்கின்றன. டெல்லியில் நிலவும் காற்று மாசுபாடு உலகளாவிய சுகாதார வழிகாட்டுதல்களைக் கணிசமாக மீறுகிறது. மேலும், நீண்ட காலத்துக்குத் தீவிர வெப்ப அலைகளுக்கு ஆளாகும் தொழிலாளர்களுக்குச் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு என்று இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

### தாய் சேய் நலனில் தாக்கம்

சமீபத்திய ஆண்டுகளில் வெப்ப அபாயங்கள் தாய் சேய் நலனிலும் தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றன. குறைப்பிரசவம், குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பது, கர்ப்பகாலச் சிக்கல்கள் போன்றவை வெப்ப அலைகளின்போது அதிகரித்துவருவதை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது. வெப்பத் தாக்கம் காரணமாகக் குறைப்பிரசவம் ஆவது இந்தியாவில் 16 சதவீதம் அதிகரித்துள்ளது. பொதுவாகவே, குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக இருப்பதாலும், காற்று மாசுபாடு – அசுத்தத் தண்ணீர் போன்ற சுற்றுச்சூழல் அபாயங்களுக்குக் குழந்தைகள் எளிதில் ஆட்படுவதாலும் குழந்தைகளும் கூடுதல் பாதிப்புகளைச் சந்திக்கின்றனர்.

### பொருளாதாரத் தாக்கங்கள்

காலநிலை மாற்றங்கள் இந்தியப் பொருளாதாரத்தையும் விட்டுவைக்கவில்லை. 2021இல் மட்டும் வெப்ப வெளிப்பாட்டின் காரணமாக, இந்தியத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 16,000 கோடி உழைப்பு மணி நேரத்தை இழந்துள்ளனர். இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 5.4 சதவீதத்துக்குச் சமம். அடுத்து, ஒவ்வொரு டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரிக்கும்போதும், தொழில் துறை உற்பத்தித் திறன் இரண்டு சதவீதம் குறையும்.

நீண்ட கால வெப்ப அலைகளுக்கு ஆட்படும் முறைசாராத் தொழிலாளர்கள் அதிக உடல்சோர்வு, மனச்சோர்வு, மன அழுத்தம், பதற்றம் போன்ற உளவியல் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும், கிராமப்புற மக்களும் பழங்குடியினரும் தங்கள் மரபு சார்ந்த வாழ்வாதார இழப்புகளைச் சந்திப்பதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இது தவிர, உணவுப் பாதுகாப்பும் மிகுந்த நெருக்கடியில் இருக்கிறது. 2015 முதல் 2021 வரையிலான காலக்கட்டத்தில் வெள்ளம், அதிக மழைப்பொழிவு காரணமாக 339 லட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலத்தையும் வறட்சி காரணமாக 350 லட்சம் ஹெக்டேர் நிலத்தையும் இந்தியா இழந்துள்ளது.

### கவனம் கோரும் தேசியச் செயல் திட்டங்கள்

இந்தியாவில் ஏற்கெனவே உள்ள காலநிலை மாற்றம் - மனித நலனுக்கான தேசியச் செயல் திட்டம் – மாநில அளவிலான திட்டங்கள் (National action plan on climate change and human health and state level action plan) நோய்க் கணிப்பு, நோய்க் கண்காணிப்பு, நோய்ப்பரவலைச் சமாளிப்பதற்கான தயார்நிலை போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குஜராத் அரசால் 2013இல் அகமதாபாத்தில் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட வெப்பச் செயல் திட்டத்தின்கீழ் குளிர்க் கூரைகள் அமைத்தல், நகர்ப்புறத்தைப் பசுமையாக்குதல், எச்சரிக்கை அமைப்புகளை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் 130க்கும் மேற்பட்ட நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

இருப்பினும், இந்தச் செயல்திட்டங்கள் செல்ல வேண்டிய தொலைவு இன்னும் அதிகம். குறிப்பாக, பொதுச் சுகாதாரத் திட்டமிடலில் காலநிலைத் தரவுகளின் ஒருங்கிணைப்பு குறைவாகவே இருக்கிறது. நோய்க் கண்காணிப்பு அமைப்புகள் தங்கள் செயலில் வேகம் காட்டுவதில்லை. இந்தச் செயல்திட்டங்களின் கணக்கத்துக்கு நிதி நெருக்கடிதான் முதன்மையான காரணம். 2030 வரை காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சுகாதாரக் கட்டமைப்பு பாதிப்புகளை எதிர்கொள்ளக் கிட்டத்தட்ட 1,600 கோடி அமெரிக்க டாலர்கள் தேவைப்படும் என்கிற நிலையில், கடந்த ஆண்டில் இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 3.47 கோடி ரூபாய் மட்டுமே. எல்லா சுகாதாரத் துறைகளையும் ஒருங்கிணைத்து, காலநிலை மாற்றத்தால் பெரிதும் பாதிக்கப்படும் மக்கள் மீது அதிகக் கவனம் செலுத்தி, உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். அதற்குப் பாதிக்கப்பட்டுள்ள சுகாதாரக் கட்டமைப்புகளை மேம்படுத்த அதிக நிதி முதலீடு முக்கியம்.

